**தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் சமகாலத்தன்மை**
**மலர் 1, இதழ் 1, 2020**
**ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்**
**பன்னாட்டுத் தரப்புத்தக எண் : 9788194845959**
**இணையதளம் : http://restpublisher.com/book-series/ctll/**

# சிற்றிலக்கியங்களுள் - திருவருணைக் கலம்பகம்

**திருமதி. எஸ்.காமேஸ்வரி**

தமிழ்த்துறை, எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனம், இராமாபுரம், சென்னை -600 089

## 1. முன்னுரை

பேரிலக்கியங்கள் அறம், பொருள், இன்பம், வீடுபேறு ஆகிய நான்கு உறுதிப் பொருட்களைக் கொண்டு விளங்கும். இதில் ஒன்றைத் தவிர்த்து கூறப்படும் நூலாக சிற்றிலக்கியம் விளங்குகிறது. நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கிய நூல்கள் மிகுதியாகக் காணப்படுகிறது. சிற்றிலக்கியத்தை வடமொழியில் "பிரபந்தம்" என்பர். பிரபந்தம் என்னும் சொல்லுக்கு "நன்கு கட்டப்பட்டது" என்பது பொருள். திருமுறையில் பதினொன்றாம் திருமுறையாக "பிரபந்த மாலை" என்று கூறுவதற்குக் காரணம் அதில் பல்வேறு சிற்றிலக்கியங்களின் தன்மை காணப்படுகிறது. சிற்றிலக்கிய வகைகளை 96 வகை என்று தமிழில் கூறுவர் கி.பி.16ஆம் நூற்றாண்டில் தோன்றிய சிவதெழுந்த பல்லவன் உலா வில் இவ்வழக்கைக் காணமுடிகிறது. தொண்ணூற்றாறு கோலப் பிரபந்தங்கள் கொண்ட பிரான் என்ற அடிகள் இதற்குச் சான்றாகும். வீரமாமுனிவர் தொகுத்த சதுரகராதியும் தொண்ணூற்றாறு வகை எனக் கூறப்படுகிறது. சிற்றிலக்கியத்தின் பாகுபாடு பொருளாகச் சிற்றின்பமும், பேரின்பமும் விளங்குகிறது. பொதுவாக சிற்றிலக்கியங்கள் கற்பனையைக் கொண்டு அமைந்தவையாகும். 96 வகை சிற்றிலக்கியங்களுள் எண்ணிக்கை அளவில் மிகுதியாகக் படைக்கப்பட்ட சிற்றிலக்கியமாக தூது, உலா, அந்தாதி, கோவை, பிள்ளைத்தமிழ் கலம்பகம் போன்றவை கூறப்படுகிறது. தெய்வங்களையோ, மக்களுள் சிறந்தாரையோ தலைவனாகக் கொண்டு அகம், புறம் எனப் பல்வகை உறுப்புகளை வைத்து பல்வகை பாவினங்களால் இயற்றப்பட்டு ஒன்பான் சுவைகள் விரவிவந்து, அந்தாதித் தொடையில் அமைவது கலம்பக இலக்கியமாகும்.

## 2. கலம்பகம் - பெயர்க் காரணம்

கலம்பகம் என்னும் பெயர் எவ்வாறு ஏற்பட்டது என்பதில் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. கலம்பகம் என்னும் சொல்லுக்குக் கலவை என்பது பொருள் ஆகும். "பல் பூ மிடைந்த பாடலை கண்ணி" என வரும் பெரும்பாணாற்றுப்படைத் தொடருக்குப் பல பூக்கள் நெருங்கிய கலம்பகம் ஆகிய மாலை" என்று நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார். தொண்டரடிப் பொடியாழ்வார், "கழிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த அலங்கலம் தொடையில்" என்று இச்சொல் அமையப் பாடுகின்றார். வெவ்வேறு வகையில் அமைந்து வரும் கலிப்பாவினைக் "கலம்பகக்கலி" என யாப்பருங்கலம் குறிப்பிடுகின்றது. மாலையும், யாப்பும் கலம்பகம் என்று பெயர் பெற்றது போலவே, பலவகைப்பட்ட பாக்களும் இனங்களும் உறுப்புக்களும் விரவி வரும் கவிதைத் தொகுதி, கலம்பகம் எனப் பெயர் பெற்றிருத்தல் வேண்டும். இவ்வாறு கொண்டால் கலம்பகம் என்பது உவமையால் பெற்ற பெயர் ஆகும். கலம்பகம் என்னும் சொல், கதம்பகம் என்னும் சொல்லின் திரிபு என்பர். கதம்பம் என்பது வடமொழியில் கதம்பகம் என்றும் வழங்கப்படும். மேலும் பாலி மொழியில் கலம்ப, கலம்பக என்னும் சொல் வடிவங்களும் காணப்படுகின்றன. இன்னும் வேறு சிலர், கலம்பகம் என்னும் சொல்லினைக் கலப்பு + அகம் எனப் பிரிப்பர். இதனால் இவை மெலித்தல் விகாரம் பெற்றுக் கலம்பகம் என்றாயிற்று. மற்றொரு சாரார், கலம் + பகம் எனப் பிரித்துப் பொருள் கூறுவர். கலம் என்பது பன்னிரண்டு மரக்கால் கொண்ட ஓர் அளவை. பகம் என்பது கடவுளின் ஆறு குணங்களைக் குறிக்கும் வடமொழிச் சொல். இவை பதினெட்டு உறுப்புக்களை உடையது என்னும் பொருளில் கலம்பகம் என்னும் பெயர் வந்தது என்பர். இன்னும் சிலர் புறப்பொருளில் அகப்பொருள் கலந்திருந்தலால் இப்பொருளின் கலப்புப் பற்றிக் கலம்பகம் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்றும் சொல்வர். இவை போன்று பல்வேறு காரணங்களைப் பெற்றிருந்தாலும் கலம்பகம் என்னும் சொல் கதம்பம் - பொருளிலேயே கலவை என்ற வழங்கப்படுகின்றது.

### 3. கலம்பகத்தின் இலக்கணம்

கலம்பகத்தின் இலக்கணங்களைப் பன்னிருபாட்டியல் முதலாகச் சதுரகராதி இறுதியாக உடைய பிரபந்த இலக்கண நூல்கள் அனைத்தும் கூறுகின்றன.

**சொல்லிய கலம்பகம் சொல்லில் ஒருபோகு**
**முதற்கன் வெண்பாக் கலித்துறை புயமே**
**அம்மானை ஊசல் யமகம் களிமறம்**
**சித்து காலம் மதங்கி வண்டே**
**கொண்டல் மருள்சம் பிரதம் வெண்டுறை**
**தவசு வஞ்சித் துறையே இன்னிசை**
**புறமேய் அகவல் விருத்தம் எனவரும்**
**செய்யுட் கலத்துடன் எய்திய அந்தம்**
**ஆதியாக வரும்என மொழிப**

கலம்பக நூல்கள் ஒரு போகையும் அதன்பின் ஒரு வெண்பாவையும் ஒரு கலித்துறையையும் பெற்று வரவேண்டும். பின்னர் 1.புயம் 2.அம்மானை 3.ஊசல் 4.யமகம் 5.கிளி 6.மறம் 7.சித்து 8.காலம் 9.மதங்கி 10.வண்டு 11.மேகம் 12.கைக்கிளை 13.சம்பிரதம் 14.தவம்3 என்னும் உறுப்புக்கள். அந்நூலில் அமைய வேண்டும். வெண்டுறை, வஞ்சித்துறை, இன்னிசை வெண்பா, அகவற்பா எனப் பலவகை விருத்தங்கள் கலந்து வரவேண்டும். அந்தாதி அமைப்பில் இருத்தல் வேண்டும். தேவர்களுக்கு நூறு, முனிவர்களுக்குத் தொண்ணூற்றைந்து, அரசர்களுக்குத் தொண்ணுறு, அமைச்சர்களுக்கு எழுபது, வணிகர்களுக்கு ஐம்பது, வேளாளர்களுக்கு முப்பது எனச் செய்யுட்களை அமைத்துப் பாடுதல் வேண்டும் என்பது பன்னிரு பாட்டியலின் கருத்து. வச்சணந்திமாலை என்னும் வெண்பாய் பாட்டியலும் சிதம்பரப் பாட்டியலும், இலக்கண விளக்கப் பாட்டியலும் பதினெட்டு உறுப்புக்கள் அமைய வேண்டும் எனக் கூறுகின்றன. நவநீதப் பாட்டியல், கலம்பக உறுப்புக்கள், பதினேழு என்று குறிப்பிடுகின்றது. பாட்டியல் நூல்கள், கலம்பகச் செய்யுட்கள் அந்தாதியில் அமைவது சிறப்பு என்று கூறும். அந்தாதி எனப்படுவது முன்பாட்டின் இறுதி அடுத்த பாட்டின் தொடக்கமாக அமையும். இவ்வமைப்பு கலம்பகங்களில் காணப்படுகிறது.

### 4. கலம்பகப் பெயர்கள்

இறைவன், அடியவர், அரசர் ஆகியோரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு கலம்பகங்கள் பாடப்படுகின்றன. சான்றாக அழகர் கலம்பகம், ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், நந்திக் கலம்பகம் என்பனவாகும். தமிழில் உள்ள கலம்பகங்கள் யாவற்றையும் மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. கடவுள் மீது பாடப்பெற்ற கலம்பகங்கள்
2. முனிவர் மீது பாடப்பெற்ற கலம்பகங்கள்
3. அரசர் மீது பாடப்பெற்ற கலம்பகங்கள்
4. திருவாமாத்தூர் கலம்பகம், மதுரைக் கலம்பகம் போன்றவை கடவுள் மீதும்
5. சிவப்பிரகாசர் பாடிய, சிவஞான பாலைய சுவாமிகள் கலம்பகம், மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் வரைந்த திருவாவடுதுறை அம்பலவான தேசிகர் கலம்பகம் என்பவை முனிவர் மீதும்
6. நந்திக் கலம்பகம் அரசர் மீதும் பாடப்பெற்ற கலம்பகங்களாகக் கலம்பக வளர்ச்சி விளங்குகின்றன.

பாட்டுடைத் தலைவனின் ஊர்ப்பெயரால் சில கலம்பகங்களும் இடம் பெறுகின்றன. அவை மதுரைக் கலம்பகம், கச்சிக் கலம்பகம், திருவருணைக் கலம்பகம் என்னும் பெயரால் விளங்குகின்றது.

### 5. கலம்பக வளர்ச்சி

தொல்காப்பியர், சங்க இலக்கியம், இரட்டைக் காப்பியங்கள், நாயன்மார் ஆழ்வார்களின் பாடல்கள் ஆகிய நூல்களின் இலக்கியக் கூறுகள் கலம்பகத்தில் காணப்படுகின்றன. மேலும் பிள்ளைத் தமிழ், தூது, அந்தாதி, கோவை ஆகிய சிற்றிலக்கியங்களின் கூறுகளும் கலம்பகங்களில் உள்ளன. கலம்பக இலக்கியத்தின் உறுப்புகளாக அம்மானை, இடைச்சியார், கீரையார், குறம், கொற்றியார், சம்பிரதம், சித்து, பிச்சியார், மதங்கியார், யோகினியார், வலைச்சியார் முதலியன விளங்குகின்றன. முதன் முதலில் தோன்றிய கலம்பக நூலாக நந்திக் கலம்பகம்

விளங்குகின்றது. இது கி.பி.9ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்றும் நந்தி மன்னன், தன் உயிரைக் கொடுத்து வாழ வைத்த கலம்பக நூல் என்றும் போற்றப்படுகிறது. இவ்வரிசையில் நந்திக் கலம்பகம், திருவரங்கக் கலம்பகம், திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம், கச்சிக் கலம்பகம், தில்லைக் கலம்பகம், திருவாமாத்தூர் கலம்பகம், திருவருணைக் கலம்பகம், புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம், திருவேங்கடக் கலம்பகம் முதலியவை புகழ்மிக்கவை. கிறித்துவ சமயத்தைச் சார்ந்த திருக்காவலூர்க் கலம்பகம், இசுலாமியச் சார்புடைய மக்காக் கலம்பகம், மதீனக் கலம்பகம் என்பனவும் தமிழ் மண்ணில் தோன்றிய சிறப்புடையவை.

## 6. திருவருணைக் கலம்பகம்

சிறப்பு மிக்க கலம்பக நூல்களுள் திருவருணைக் கலம்பகமும் இடம்பெறுகிறது. இந்நூல் திருவண்ணாமலையில் வீற்றிருக்கும் அண்ணாமலையார் மீது பாடப்பெற்ற கலம்பகமாகும். இக்கலம்பகத்தில் காப்புச் செய்யுள் உட்பட 102 பாக்கள் உள்ளன. இந்நூலில் ஆசிரியப்பா, ஆசிரிய விருத்தம், வெண்பா, வெண்டுறை, வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம், கலிப்பா, கட்டளைக் கலித்துறை, கலித்தாழிசை, கலிவிருத்தம், அறுசீர் எழுசீர் விருத்தங்கள், நேரிசை வெண்பா, எனப் பாவும் பாவினங்களும் அமைந்துள்ளன. மேலும், இந்நூலில் 24 உறுப்புக்கள் உள்ளன. அவை அம்மானை, இடைச்சியார், இரங்கல், ஊசல், கிளி, கார், காலம், குறம், கைக்கிளை, கொற்றியார், சம்பிரதம், சித்து, தவம், தாழை, தூது, பாண், பிச்சியார், புயவகுப்பு, மடக்கு, மடல், மதங்கியார், மரம், வளைச்சியார், வெறிவிலக்கு எனவும் இவற்றில் களி, குறம், கொற்றியார், சித்து, தவம், தழை, மதங்கியார், பிச்சியார், வலைச்சியார் முதலிய உறுப்புக்கள் ஒவ்வொன்றுக்கும் இரண்டிரண்டு பாடல்கள் உள்ளன. இரங்கல் என்னும் பிரிவில் பாடல்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. சைவ சமயத்தைப் பற்றி கூறப்படும் இந்நூல் திருமாலைப் பற்றிய பழிப்புரைகள் பல இடங்களில் காணப்படுகின்றன. இவை போன்று வைணவ சமய நூலான திருவரங்கக் கலம்பகத்தில் சிவ பெருமானைப் பழித்துரைக்கும் பகுதிகளும் உள்ளன. இப்பழிப்புரைகள் சமயப்பற்றால் உருவாகியிருக்கும் என்பதனைக் காட்டுகிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் தலைசிறந்து விளங்கும் தலமாக திருவண்ணாமலை விளங்குகிறது. திருவருணைக் கலம்பகம் நூல் முழுவதுமாக திருவண்ணாமலையைப் பற்றியது. ஆரூர் பிறக்க முக்தி, காசி இறக்க முக்தி, தில்லை காண முக்தி, அண்ணாமலை, நினைக்க முக்தி என்பது சைவர்கள் தலத்தைப் பற்றிக் கூறிய முகவுரை. அண்ணாமலை நினைக்க முக்தி தரும் என்பதனை இந்நூல் பல இடங்களில் குறிப்பிடுகின்றது.

**ஆதிநெடுமால் அயன்காண அன்று பரஞ்**
**சோதிச் செழுஞ்சுடராய்த் தோன்று மாலை - வேதம்**
**முழுங்கு மலை சிந்திப்பார் முன்னின்று முத்தி**
**வழங்குமலை அண்ணாமலை**
**என்று ஒரு வெண்பாவின் மூலமாய் அறிய முடிகிறது.**
**விளவார் கனிபட நூறிய கடல்வண்ணனும் வேதக்**
**கிளர்தா மரை மலர்மேலுறை கேடில் புகழோனும்**
**அளவா வண மழலாகிய வண்ணா மலையண்ணல்**
**தளராமுலை முறுவல் லுமை தலைவன் னடிசரணே**

திருவருணைக் கலம்பகம் என்னும் நூல் கலம்பங்களுள் தலைசிறந்த நூலாகப் போற்றப்படுகிறது. இந்நூல் முழுவதும் சைவ மணம் கமழ்ந்து சிவபெருமானின் புராணச் செய்திகளையும், திருவண்ணாமலையின் சிறப்பையும் எடுத்துரைக்கிறது. ஏனைய கலம்பகங்களுள் காணப்படாத, சைவ சமய குரவர்களின் துதி அமைந்துள்ளது. திருவருணைக் கலம்பக நூலின் ஆசிரியர் சைவ எல்லப்ப நாவலர். இவர் தஞ்சை மாவட்டத்தை அடுத்த பூந்தாழை, என்னும் ஊரைச் சேர்ந்தவர் என்னும் இவர் திருவெண்காட்டை அடுத்த இராதா நல்லூரினர் என்றும் மற்றும் சிலர் சீர்காழியினர் என்றும், திருவண்ணாமலையைச் சார்ந்தவர் என்றும் கூறப்படுகின்றது.

மேன்மையுடைய பல பொருள்களுக்குத் "திரு" என்னும் அடைமொழி வருகின்றது. தமிழிலே தேவர்கள், அடியார்கள், ஞான நூல்கள், மந்திரங்கள், புண்ணிய தலங்கள், புண்ணிய தீர்த்தங்கள் போன்ற மகிமைப் பொருளைக் காட்டி, அவற்றிற்கு முன்னே "திரு" என்னும் அடைமொழிப் பெற்று திருநந்திதேவர், திருநாவுக்கரசர், திருவாசகர், திருவைந்தெழுத்து, திருவருணை, திருவையாறு, திருவடி, திருநாமம், திருவிழா என்றும் வழங்கப்படுகிறது. இவ்வாறு "திரு" என்பது மேன்மையான பொருளைக் கொண்டதால் அருணைக் கலம்பகம்

திருவண்ணாமலையானை உயர்த்திக் கூறும் வகையில் திருவருணைக் கலம்பகம் என்னும் பெயர் இந்நூலுக்கு வழங்கப்படுகிறது. சைவ எல்லப்ப நாவலர் பல தலங்கள் சென்று தரிசிக்க விளங்கியவராய் திருவண்ணாமலை என்னும் திவ்ய தலத்தை அடைந்து அங்கு அருணாசல புராணம், திருவருணையந்தாதி, திருவருணைக் கலம்பகம் முதலிய நூல்களையும் பின்னர் திருவெண்காட்டுத் தல புராணம், செவ்வந்திப் புராணம், திருவிரிஞ்சைப் புராணம், தீர்த்தகரிப் புராணம், திருவாரூர்க் கோவை, சௌந்தரியலகரியுரை முதலிய நூல்களையும், உரைகளையும் இயற்றினார் என்பது சிறப்புக்குரியது. இவர் இளமையிலேயே தென்மொழி, வடமொழிகளில் வல்லுநராய்த் திகழ்ந்தவர். சைவத்தில் மிகுந்த பற்றுடையவர். தருமபுர ஆதினத்து ஸ்ரீ சிவஞான தேசிகரிடம் சிவதீக்கை பெற்று, சைவ சித்தாந்த சாத்திரமுங்கற்றுக் கவி பாடுவதில் வல்லவர். அதனால் இவருக்கு திவ்யகவி நாவலர் எனப் பட்டங்களும் பெற்று விளங்கினார். இவர் காலம் பதினேழாம் நூற்றாண்டு என்றும் (கி.பி.1623) கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டு என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். மற்றும் சிலர் பிள்ளை பெருமாள் ஐயங்கார் வாழ்ந்த கி.பி.12ஆம் நூற்றாண்டு எனவும் கூறுவர். எல்லப்பன் என்பது ஞாயிற்றின் பெயர். இப்பெயரினை மக்களுக்கு இட்டு வழங்குதலை இன்றும் தமிழகம், ஆந்திரம், கன்னடம் முதலிய நாடுகளில் காணலாம். இவ்வாறு திருவருணைக் கலம்பகத்தின் ஆசிரியர் சைவ எல்லப்ப நாவலரைப் பற்றி புலவர் புராண முடையார்.

**சைவ வெல்லப்ப நாவல னெனும் பேர்**
**தரித்தவன் சங்கரன் வசிக்கு**
**மைவகைத் தலத்தி னடுவெனக் குலவு**
**மருணையில் புராணமா தியநூல்**
**தெய்வநேர் வரக்கண் டவருமெச் சிடுஞ்சீர்**
**திகழ்தரத் தொடுத்த னவற்றைக்**
**கைவயி னெழுதிச் சுமந்துரைக் துணர்ந்து**
**களிப்பவர் கணிக்கரும் பலரே**

என்ற பாடல் வரிகள் இவரின் பெருமையைப் புலப்படுத்துகின்றது.

## 7. அருணைக் கலம்பகம் தோன்றிய வரலாறு

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் தாம் பாடிய திருவரங்கக் கலம்பகத்தைப் பார்க்குமாறு நாவலருக்கு அனுப்பினார். நாவலர், தாம் பாடிய திருவருணைக் கலம்பகத்தைப் பார்க்குமாறு ஐயங்காருக்கு அனுப்பினார். இவ்வாறு இருபெரும் புலவர்களும், இரண்டு கலம்பகங்கள் பாடினர். இருவரும் நட்பு முறையில் திட்டமிட்டுப் பாடியதே இக்கலம்பகம் என்பார் சிலர். ஒரு சமயம் நாவலருக்கும் ஐயங்காருக்கும் வாதம் நடைபெற்றது. நடுநிலையாளர்கள், இவ்விருவரையும் ஒரே இரவில் கலம்பகம் பாடுமாறு கூறினர். அவ்வாறே இவர்கள் இருவரும் பாடினர். நடுநிலையாளர்கள் அவற்றைப் பார்த்து ஐயங்கார் அம்மானையில் அடி சறுக்கினார் என்று கூறி நாவலரின் கலம்பகத்தைப் போற்றினர் என்பர் வேறு சிலர். ஐயங்கார் கலம்பகம் பாடி நாவலுக்கு அனுப்ப அதனைப் படித்த நாவலர் ஐயங்காரின் அம்மானையில் அடி சறுக்கினார் என்று சொல்லி உடனே அருணைக் கலம்பகம் பாடி ஐயங்காருக்கு அனுப்பினார். ஐயங்கார் படித்துக் களித்தார் என்பர் மற்றும் சிலர். நாவலர் தருமை ஆதினத்தில் தேசிகரோடு உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது புலவர் ஒருவர், ஐயங்கார் பாடிய திருவரங்கக் கலம்பகத்தைப் புகழ்ந்து கூறினார். அது கேட்ட நாவலர், ஐயங்கார் அம்மானையில் அடி சறுக்கினார் எனக்கூறி அன்றிரவே அருணைக் கலம்பகம் பாடி முடித்தார் என்பர் வேறு சிலர். நாவலரின் மனைவியார் திருவரங்கக் கலம்பகத்தைக் கண்ணுற்றார். அதில் "வாடியோட வனசமன்ன" என்னும் சிவதூடணை மலிந்த பாடலைக் கண்டு மனக்கவலையுற்றிருந்தமையால் தமது நாயகர் கலம்பகம் பாடுவதறிந்து, இதுவே தக்க சமயம் என்று கண்டு அன்றிரவே

**கருடனோட மற்சாயை கமலயோட முற்கரங்**
**காட்டியோட மூன்றிராமற் கண்ட மட்டி லோடவே**
**மருளிவந்த சிங்கமோட வாமனென்பு பாறவே**
**வஞ்சமுள்ள கண்ண னோட மாரன்றச் சேனை**
**மிருளினோட முண்டகத்த வேங்கியோட வென்றளிக்**
**கீறுறாதங் குயிரளித்த வேந்தல்யாவன் வேதமே**
**யருளுவந்த முதல்வன் யாவ னருவைகண்டு வாழ்வினை**
**வாரநாதி மூலமென்ப தறிசியாத மாக்களே**

என்னும் செய்யுள்பாடி அக்கலம்பகத்தில் சேர்த்து கொள்ளும்படி வேண்டினர். எனினும் நாவலர் இச்செய்யுளைக் கலம்பகத்தில் சேர்க்கவில்லை என்பது அறியத்தக்கது.

### 8. திருவருணைக் கலம்பகத்தில் - புராணச்செய்திகள்

1. அடிமாறி நடித்தது, 2. அருச்சனனுக்குப் பாசுபதாதிரம் கொடுத்தது, 3. அறுபத்தாறாயிரம் பொன் கொடுத்தது, 4. ஆலகாலவிடம் உண்டது, 5. இரணியன் உரம் கிழித்தது, 6. இராவணனின் உரம் கொண்டது, 7. கண்ணப்பர் கண்பறித்துக் கொடுத்தது, 8. காலனைக் காலால் உதைத்தது, 9. சரப அவதாரம் எடுத்தது, 10. சலந்தராசுரனைக் கொன்றது, 11. சுந்தரர், முதலை உண்ட பாலனை அழைத்தது, 12. தக்கன் தலையை வெட்டியது, 13. தக்க யாகத்தை அழித்தது, 14. தழுவக் குழைந்தது, 15. தலைமாலை அணிந்தது, 16. தலையில் கங்கையைத் தாங்கியது, 17. தலையில் திங்களைச் சூடியது, 18. திங்களைத் தேய்த்தது, 19. திருஞான சம்பந்தர் தீயை ஏவியது, 20. திருநாவுக்கரசர் யானையின் மதம்போக்கியது, 21. திருமால் அம்பாக அமைந்தது, 22. திருமால் ஏற்றுவாகனம் ஆகியது, 23. திருமால் கண்பறித்தது, 24. திருமால் தேவியானது, 25. திருவிக்கிரம வடிவத்தைக் கொன்றது, 26. தேவர் அமுதம் கடைந்தது, 27. நரசிங்கத்தைக் கொன்றது, 28. நான்முகன் உந்தித் தாமரையில் தோன்றியது, 29. நான்முகனின் தலையைக் கிள்ளியது, 30.நெருப்பு மலையாக வடிவெடுத்தது, 31. பதஞ்சலி, வியாக்கிரபாதர் வணங்கியது, 32. புலியைக் கொன்றது, 33. மன்மதனை எரித்தது, 34. மாலும் நான்முகனும் அடிமுடி தேடியது, 35. முகுந்தனுக்குச் சங்காழி கொடுத்தது, 36.முப்புரம் அழித்தது, 37. மேருமலையை வில்லாக வளைத்தது, 38. யானைத்தோலைப் போர்த்தது, 39. வலைவிசி நின்றது, 40. விநாயகர் பாரதம் எழுதியத,41. வேதம் குதிரையாகியது, போன்ற 41 புராணச் செய்திகள் இடம்பெறுகின்றன.

### 9. பதிப்புகள்

இத்திருவருணைக் கலம்பகம் மூலம் மட்டும் கி,பி.1868-இல் முதன் முதலாக புஷ்பரதச் செட்டியார் பதிப்பித்தார். 1876இல் கந்தசாமி முதலியார் மீண்டும் பதிப்பித்தார். 1891 இல் முதல் 11 பாக்கள் உரையுடன் வெளிவந்தன. பின்பு 1934 இல் திரு.இராமலிங்கம் அவர்கள் கலம்பகத்திற்கு உரைஎழுதி வெளியிட்டார். 1868ல் வெளிவந்த இக்கலம்பகம் நூறு ஆண்டுகள் கழித்து 1968இல் புதிய பதிப்பாக வெளிவந்தது. இதில் பொழிப்புரையில் குறிப்புரையும் இணைந்து வெளிவந்தன. இறுதியில் கலம்பக நூல்கள் பற்றிய பட்டியலும் கலம்பக உறுப்புகளில் விளக்கமும் மற்றும் அண்ணாமலையைப் பற்றிய நூல்களும் அகர வரிசையாக இணைக்கப்பட்டுள்ளன. தற்போது டிசம்பர் 2011இல் சாரதா பதிப்பகம் மூலம் வெளிவந்துள்ள திருவருணைக் கலம்பகம் நா.இராமலிங்கம் பிள்ளை அவர்களால் எழுதப்பட்டது.

### 10. முடிவுரை

தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்கள் இன்பத்தைத் தருவதோடு, வாழ்வியல் நெறிகளையும் கூறுகின்றன. சோழர் காலத்தில் பல இலக்கயங்கள் தோன்றின. இவ்விலக்கியங்களுள் பேரிலக்கிய நூல்களும், சிற்றிலக்கிய நூல்களும் அடங்கும். சிற்றிலக்கியத்தில் எவ்வாறு கலம்பகம் இடம் பெறுகிறது என்பதையும், திருவருணை கலம்பகத்தின் சிறப்பையும் 41 புராணச்செய்திகள் வழியாக கூறப்படுகிறது. மேலும், மண், பொன், பெண் என்ற மூவாசைகளை விடுத்து சிவபெருமானின் திருவடிகளைச் சரணம் அடைந்தால் முக்தி என்றும், உலகில் அனைத்தும் நிரந்தரமற்றவை என்பதையும் உணர்த்துகிறது.

### துணைநூற்பட்டியல்


[1].இராமலிங்கம், நா. திருவருணைக் கலம்பகம், மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை - 600 014, 2011.

[2].அருணாசலம், மு, தமிழ் இலக்கிய வரலாறு, அருண் பதிப்பகம், திருச்சி, 2012.

[3].இளவரசு, சேம, திருவணைக் கலம்பகம், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1968.

[4].பாலசுப்பிரமணியன்.கு.வே,கலம்பகதிறன்.தொல்காப்பியம்பொருளதிகாரம்,பூம்புகார்பதிப்பகம், பிரகாசம் சாலை, சென்னை - 108, 2008.

[5].இணையதளம்: www.tamilvu.org.

[6].www.maduraiproject.org.